# உங்கள் வாழ்வின் மிகச்சிறந்த நாள்!



இதுவரை கேட்டிராத

மிகச்சிறந்த செய்தி!

உங்களை பாதிக்கும் உண்மைகள்!

**ஓர் அற்புதமான உண்மை:** ஏழு-நாள் வாரசுழற்சியை மாற்றுவதற்கு இரண்டு தேசங்கள் முயற்சித்ததென்று உங்களுக்குத் தெரியுமா? பிரன்ச்சு தேசம் தனது 1789வது ஆண்டு புரட்சிக்குப் பிறகு 10-நாள் வாரக்கணக்கை நடைமுறைக்கு கொண்டுவந்தது. மேலும் முன்னாள் சோவியத் யூனியனும் 5-நாள் வாரத்தை ஸ்டாலினின் ஆட்சியின்கீழ் 1929ம் ஆண்டு முயற்சி செய்தது. ஆனால் இவ்விரண்டு முயற்சிகளும் தோல்வியடைந்தன. பிரன்ச்சு மற்றும் சோவியத்திலுள்ள பணியாட்களும் குடும்பங்களும் ஓய்வு கிடைக்காத காரணத்தாலும், குடும்பத்துடன் நேரம் செலவிடமுடியாததாலும் இந்தப் புதிய ஏற்பாட்டுக்கு விரோதமாகப் புரட்சி செய்தனர். இறுதியில் அவ்விரண்டு தேசங்களுமே பொதுவாக ஒரு நாள் விடுமுறையுடன்கூடிய ஏழு-நாள் வாரக்கணக்கிற்கே திரும்பினர்.

ஏழு-நாள் வாரக்கணக்கானது நமது மரபணுக்குள்ளே பிண்ணிப்பிணைந்துள்ளதுபோல் தெரிகிறதல்லவா? ஆதிமுதலாகவே, மனுக்குலம் தனது சமுதாயங்களை இந்த வாரக்கணக்கில்தான் திட்டமிட்டது. ஆனால் ஏழு-நாள் எதற்காக? ஏன் ஐந்து அல்லது 10 நாட்களாக இருக்கக்கூடாது? நாட்கள் பூமியின் சுழற்சியினாலும், வருடங்கள் பூமி தனது பயணத்தை சூரியனை சுற்றி வருவதிலும், மாதங்களின் கணக்கு சந்திரன் தன் பயணத்தை பூமியைச் சுற்றி வருவதிலுமிருந்து கணக்கிடப்படும்போது, ஏழுவார கணக்கிற்கு மட்டும் எந்த ஒரு கோள்-சார்ந்த பதிலுமில்லை.

மாறாக, தேவனே இந்த ஏழு-நாள் கணக்கை நியமித்தார்! மேலும் அவர் உங்களுக்காக ஒவ்வொரு வாரமும் ஒரு விசேஷித்த ஓய்வுநாளையும் நியமித்திருக்கிறார் என்பது உங்களுக்கு தெரியுமா? அதன் பெயர் ஓய்வுநாள்! வாரசுழற்சியைப்போலவே, ஓய்வுநாளும் உங்கள்

வாழ்க்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தத்தான செய்கிறது. மேற்கொண்டு படியுங்கள்.

## ஓய்வுநாள் குறித்த ஆறு வேதாகம அடிப்படையிலான உண்மைகள் இதோ!

### 1 ஓய்வுநாள் அனைவருக்காகவும் உண்டாக்கப்பட்டது!

சிருஷ்டிப்பின் துவக்கத்தில், அவர் படைத்த மக்களுக்கு தங்கள் வேலையிலிருந்து ஓய்வு அவசியம் தேவைப்படும் என்பது அவருக்கு தெரிந்திருந்தது.

ஆறு நாள் படைப்பிற்குப் பிற்பாடு, ஏழாம் நாளில் அவர் ஓய்ந்திருந்தார் (ஆதி. 2:2). அவர் சோர்வாக இருந்தார் என்றல்ல, மாறாக நமக்கான ஓர் எடுத்துக்காட்டை அங்கே அவர் காண்பித்தார். ஏன்? ஒரே நாளில் எல்லோரும் ஓய்ந்திருக்கும்படியாக ஓய்வுநாள் வடிவமைக்கப்பட்டுள்ளது, அதாவது ஒன்றுசேர்ந்து குடும்பத்துடனும் நண்பர்களுடனும் நேரத்தை செலவிடவும் தேவனை தொழுதுகொள்ளவும் ஒரு நாள்.

இயேசுவும், ஓய்வுநாள் மனிதனுக்காக (மனுக்குலத்திற்காக) உண்டாக்கப்பட்டது என்பதை உறுதிபடுத்தினார் (மாற்கு 2:27). சிருஷ்டிப்பின்போது, தேவன் ஓய்வுநாளை ஏற்படுத்தும்போது, அதாம் ஏவாள் என்ற இருவர் மட்டுமே வாழ்ந்தனர். தேவனாகிய கர்த்தர் எந்த ஒரு யூதனும் உலகத்தில் தோன்றுவதற்கு முன்னமே ஓய்வுநாளை ஆசீர்வதித்து பரிசுத்தமாக்கினார் (ஆதி. 2:1).

### 2 ஏழாம் நாளே ஓய்வுநாள்!

ஆதியாகமத்தில், தேவன் ஏழாம் நாளை

ஆசீர்வதித்து பரிசுத்தமாக்கினார், அது சனிக்கிழமையாகும்! 100க்கும் மேற்பட்ட மொழிகளில் வாரத்தின் ஏழாம் நாளான சனிக்கிழமைக்கு பதிலாக "சாபத்" என்ற வார்த்தையே உபயோகிக்கப்படுகிறது என்பது உங்களுக்கு தெரியுமா? உதாரணத்திற்கு, ஸ்பானிய மொழியில் சனிக்கிழமையை "சபாடோ" என்றே அழைக்கின்றனர். அதின் அர்த்தம் ஓய்வுநாள் ஆகும்.

வேதத்தில் கூறியுள்ளபடி, சனிக்கிழமைதான் இன்னும் வாரத்தின் ஏழாம் நாளாக உள்ளது என்பதை நாம் எப்படி அறிந்துகொள்ளமுடியும்? சுமார் 4000 ஆண்டுகளுக்கு யூதர்கள் ஏழாம் நாளையே ஓய்வுநாளாகக் கண்டிப்புடன் ஆசரித்து வந்தனர் - ஆபிரகாம், மோசே மற்றும் இயேசுவின் காலத்திலும் அவர்கள் அதை உடைக்காமல் கடைபிடித்திருந்தனர். மேலும், வாரத்தின் ஏழாம் நாளாகிய ஓய்வுநாள் முதல் நாளுக்கு மாற்றியதாக வேதத்தில் எங்கேயும் கூறப்படவில்லை.

## 3 இயேசு ஓய்வுநாளை ஆசரித்தார்!

புதிய ஏற்பாட்டிலுள்ள நான்கு சுவிசேஷங்களில் "ஓய்வுநாள்" என்ற வார்த்தை ஏறத்தாழ 60 முறை வருகிறதென்று உங்களுக்குத் தெரியுமா? லூக்கா 4:16ல், ஓய்வுநாளில் அவர் ஆலயத்திற்குச் செல்வது அவருடைய வழக்கமாக இருந்ததென்றும் நாம் வாசிக்கிறோம். நற்செய்தி அறிவிப்பதின் மையப்பொருளாக இயேசுவும் ஓய்வுநாளில் உபதேசம்பண்ணி மக்களை சுகப்படுத்தும் செயல்களில் ஈடுபட்டார். அவருடைய மரணத்திலும்கூட இயேசு ஓய்வுநாளை ஆசரித்தார். அவர் "ஆயத்தநாளில் (வெள்ளிக்கிழமை)" சிலுவையிலறையப்பட்டு, "ஓய்வுநாளில் (சனிக்கிழமை)" கல்லறையில் ஓய்வெடுத்து, சூரிய அஸ்தமனத்திற்குப் பின் வந்த வாரத்தின் "முதலாம் நாளிலே

(ஞாயிற்றுக்கிழமையில்)" உயிர்த்தெழுந்தார் என்று வேதம் கூறுகிறது. லூக்கா 23:52-56 வரை படிக்கவும்.

## 4 ஆதி அப்போஸ்தல சபையும் ஓய்வுநாளை ஆசரித்தது!

இயேசு மரித்தபின்பு ஓய்வுநாள் "ஒழிந்துபோயிற்றென்று" சிலர் நம்புகிறார்கள். ஆனாலும் இயேசுவின் வழக்கத்தின்படியே ஆதி அப்போஸ்தல சபையும் ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரித்தது.

ஓய்வுநாளைக் கண்டிப்புடன் கடைப்பிடித்து வந்த சவுல் என்ற தீவிர பரிசேயன் கிறிஸ்தவனாக மாறியபின்பு அனைவராலும் அப்போஸ்தலனாகிய பவுல் என்றறியப்பட்டார். அவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்துப் பிரசங்கிக்கத் துவங்கியபோது, ஓய்வுநாளில் தேவாலயத்திற்குச் செல்வது அவரது "வழக்கமாக" இருந்தது (அப். 13:42). ஆதி அப்போஸ்தல சபையில், யூதர்களும் புறஜாதிகளும் வேதத்தில் சொல்லப்பட்டுள்ள ஓய்வுநாளையே ஆசரித்தனர்.

## 5 தீர்க்கதரிசனத்தில் ஓய்வுநாள்!

ஆச்சரியமான விதத்தில், ஓய்வுநாள் இன்றும் முக்கியமானதாக இருக்கிறது, ஏனெனில் ஓய்வுநாளை நித்தியத்திற்கும் நாம் கொண்டாடப்போகிறோம் என்று தேவன் கூறுகிறார். "நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பதுபோல, உங்கள் சந்ததியும், உங்கள் நாமமும் நிற்குமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது: மாதந்தோறும், ஓய்வுநாள்தோறும், மாம்சமான யாவரும் எனக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா 66:22, 23).

உண்மைதான்! ஓய்வுநாள் மிகவும் விலையேறப்பெற்றதாகும், ஏனெனில் வரவிருக்கும் அழகிய புதிய பூமியில் தேவனுடைய ஜனங்கள் அதை நித்திய நித்தியமாய் ஆசரிப்பார்கள். நாம் நித்தியத்திற்கும் அதை ஆசரிக்கப்போகிறோம் என்றால், தேவனுடைய நான்காம் கற்பனைக்கு நாம் கீழ்ப்படிகிறோம் என்பதற்கு அத்தாட்சியாக ஓய்வுநாளை இன்று ஏன் நாம் ஆசரிக்கக்கூடாது?

## 6 இன்றும் ஓய்வுநாள் முக்கியமானதே!

மத்தேயு 5:17ல், இயேசு இவ்வாறு கூறுகிறார்: "நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்." இயேசு ஓய்வுநாளை ஆசரித்தார், அவரைப்போலவே அவருடைய பின்னடியார்களும் ஆசரிக்கவேண்டுமென்று வாஞ்சிக்கிறார். "நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால், கற்பனைகளைக் கைக்கொள்" (மத்தேயு 19:17) என்று கூறினார். இங்கே இயேசு பத்து கற்பனைகளைக் குறித்து பேசுகிறார். அதில் "ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக. ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்" (யாத். 20:8-10 வாக்கியங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன) என்ற நான்காம் கற்பனையும் அடங்கும். உங்கள் கவனத்திற்கு:


1. "ஓய்வுநாளை ஆசரிக்க நினைப்பாயாக" என்று தேவன் கூறியதற்கு ஒரு காரணம் உண்டு – ஏனெனில் நாம் அதை மறந்துபோவோம் என்று அவருக்குத் தெரிந்திருந்தது!
2. "ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்" என்று வேதவாக்கியம் கூறுகிறது.

அப்படியானால் ஓய்வுநாள் என்பது ஞாயிற்றுக்கிழமை அல்ல அது "கர்த்தருடைய ஓய்வுநாள்!"

## 7 ஓய்வுநாள் - வாரத்தின் மிகச்சிறந்த நாளாகும்!

நமது அன்றாட வேலைகளிலிருந்து ஓய்ந்திருக்கவேண்டுமென்று தேவன் ஓய்வுநாளை வடிவமைத்ததுபோலவே, நமது ஆவிக்குரிய ஆரோக்கியம் புதுப்பிக்கப்படுவதற்கான நினைவு நாளாகவும் ஏழாம் நாள் இருக்கிறது. "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத்தேயு 11:28-30) என்று இயேசு கூறுகிறார். இயேசுவே நம்முடைய இளைப்பாறுதலாக இருக்கிறார்! (எபிரெயர் 4ஐ வாசிக்கவும்).

"ஓய்வுநாள் மனமகிழ்ச்சியின் நாள்" (ஏசாயா 58:13) என்றும் வேதம் கூறுகிறது. நம்முடைய எல்லா வேலை பளுவையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அவரை சிருஷ்டிகராக நினைவுகூறவும், மற்றவர்களிடமும் ஓர் இணைப்பை ஏற்படுத்திக்கொள்ளவும், தேவன் ஓய்வுநாளை "சரியான நேரத்தில் கொடுக்கப்பட்ட பாலைவனச்சோலையாக" படைத்திருக்கிறார். வேதம் சொல்லும் ஓய்வுநாளை ஆசரிப்பதன் மூலம், ஒவ்வொரு வாரமும் நீங்கள் சமாதானத்தையும், ஓய்வையும், புதுப்பிக்கப்படும் அனுபவத்தையும் உங்கள் சரீரம் மற்றும் மனதில் பெற்றுக்கொள்கிறீர்கள். ஓய்வுநாளை ஆசரித்துப்பாருங்கள், அவருக்கு நீங்கள் கீழ்ப்படிவதை தேவன் எவ்வளவாய் ஆசீர்வதிக்கிறார் என்று பாருங்கள்!




## இன்னும் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா?

“சரித்திரத்தில் தொலைந்துபோன நாள்” என்ற பாடம் ஓய்வுநாளின் தேவையை நீங்கள் புரிந்துகொள்ளவும், அதில் களிகூரவும் உங்களுக்கு உதவும்!
உங்களுக்கான இலவசப் பிரதியை Lost07.AFTV.in-ல் பதிவிறக்கம் செய்யவும்.

---

AMAZING FACTS
India
AmazingFactsIndia.org
Post Box No 51
Banjara Hills, Hyderabad 500034
+91 916 916 4480 | Bookstore.AFTV.in